முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி ஐப்பசி மாதம் 25ம் திகதி முதல் கார்த்திகை மாதம் 2ம் திகதி வரை**

**நவம்பர் 11ம் திகதி முதல் நவம்பர் 18ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1. இயற்கை பலம் கொண்ட பரதமே**
**இனபேதமிலா சகோதரத்துவ**
**தயவுமிக்க தன்னலமிலா தமிழகமே**
**தமிழகம் இந்தியாவில் இந்த வார**

**2. வார நிகழ்வாக எதிர்கால பலனை**
**வழங்குவேன் விளம்பி துலை இருபானை திகதி மேல்**
**ஈரான திகதி திங்கள் தேளின் வரை**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 25ம் நாள் 11.11.2018, ஞாயிறு முதல் கார்த்திகை மாதம் 2ம் நாள் 18.11.2018, ஞாயிறு முடிய)**
**இயம்பிடுவேன் சுப்பிரமணியர் யானும்**

**3. யானுரைக்க தமிழகம் தன்னில்**
**இயல்பான மழை வளம் கூடும்**
**ஞான பூமி விழாக்கள் கூடி**
**நல் தருமங்களும் தெய்வபலமும் வளரும்**

**4. வளரும் ஆன்மீக சிந்தை**
**வாழ்வாதார ஏழைகளின் நிலை**
**தளரும் முன்னேற்றம் இல்லா**
**தலைமைகள் உயர் துறைகள் வழி**

**5. வழியான செயல்கள் தயவுபட**
**வருமுலகில் நடக்கவே மாற்றம்**
**அழிவில்லா பொருள் வளம் கூடும்**
**அனைவருக்கும் வாழ்வாதாரம் உயரும்**

**6. உயர்வான செயலாக சேவையாக**
**ஊழலை விரட்டும் அரசே**
**தயவை தக்க ஆதரவை**
**தடைபடா மக்களிடம் பெறும்**

**7. பெருமைமிகு கழனி மக்களுக்கு**
**பேருதவி செய்து காக்காவிட்டாலும்**
**வறுமைக்கு தள்ளி நசித்து**
**வாழவிடா முடக்காதிருந்தாலே போதும்**

**8. போதுமப்பா இந்த பூமியதும்**
**புண்ணிய பூமி தன்னை காத்துக்கொள்ளும்**
**ஆதரவில்லா நடந்து புவிமேல்**
**ஆசை வைத்தால் அழிவை தந்தால்**

9. தந்தாலோ தமிழக மண்ணில்
தரும சக்திகள் வெகுண்டு
தந்திடும் எதிர்மறை சக்திகளை
தகர்த்திடும் நிலை உருவாகும்

10. ஆகவே ஆளுமை சேவை வழி
அதிகாரம் கொண்ட தலைமைகள்
வகைபட தேச நலமோடு
வாழ்வாதாரம் மக்கள் நலம் காக்கும்

11. காக்கும் சக்தியாக இயங்கவே
கலியுகத்தில் மத்தியும் மாநிலமும்
தேக்கமிலா வளர்ச்சி தகுதி
தெய்வீக ஆட்சியாக மாறும்

12. மாறுதலை உலகில் செய்ய வந்த
மகான் அரங்கமகா ஞானியரை
மாறுதல் பெற வேண்டி அணுகி
மன்னர்களும் மக்களும் ஆசிபெற

13. ஆசி பெற நிலைகள் மாறும்
அறம் வளர கலியுகம் தேறும்
நேசக்கரம்பட மத்திய மாநிலம்
நல்லுறவுகளாய் மாறி நிலை உயரும் வார ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :

விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 25ம் நாள் 11.11.2018, ஞாயிறு முதல் கார்த்திகை மாதம் 2ம் நாள் 18.11.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் தமிழகத்தில் இந்தியாவில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்

இயற்கை பலத்தினை பலமாகக் கொண்ட பாரததேசமே இனபேதமில்லாது அனைவரையும் சகோதரராக பாவிக்கும் பண்பும் அன்பும்மிக்க தமிழகமே இந்த தமிழகம் மற்றும் இந்தியாவில் ஐப்பசி மாதம் 25ம் நாள் 11.11.2018, ஞாயிறு முதல் கார்த்திகை மாதம் 2ம் நாள் 18.11.2018 ஞாயிறு முடிய உள்ள கால அளவில் நடக்க இருக்கும் நிகழ்வுகளைக் குறித்து வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

ஞானபூமியாம் தமிழகத்தினில் இயல்பான அளவில் மழை பெய்து மழை வளம் பெருகிடும். ஞானபூமி தமிழகத்தினில் விழாக்கள் அதிகமாக மக்களால் கொண்டாடப்பட்டு நாட்டினில் தருமம் பெருக்கும், தெய்வபலம் பெருகிடும், ஆன்மீகசிந்தை வளர்ச்சியடையும், வாழ்வாதாரம் குறைந்து ஏழைகளின் நிலை தளர்ச்சியடையும், முன்னேற்றம் இல்லாமல் தவிப்பார்கள்.

நாட்டை ஆளும் ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் உயர் துறைகளின் மூலமாக மக்களுக்கு செய்யும் செயல்பாடுகள் எல்லாம் தயவுடன் கூடிய செயல்களாக இருந்திட வேண்டும். அவ்வாறு நடந்திட நாட்டினில் நல்மாற்றங்கள் உருவாகும், பொருள் வளம் குன்றாது பெருகிடும். நாட்டில் உள்ள அனைவரின் பொருளாதார நிலை உயர்வடையும்.

ஊழலினை விரட்டி நாட்டு மக்களுக்கு சேவை மனப்பான்மையுடன் செயல்களை அரசு செய்வதுடன், மக்கள் நலன் கருதி திட்டங்களை செயல்படுத்தினால் மக்களிடம் தகுந்த ஆதரவினை தடைபடாமல் அரசு பெற்றிடும்.

அதைவிடுத்து மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல் நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்தால், பூமியின் மீது ஆசை கொண்டு செயல்பட்டால் மக்களுக்கு அழிவைத் தரும் செயல்களை செய்தால் தமிழகத்தினில் தருமத்தின் சக்திகள் எல்லாம் எழுந்து எதிர்மறையாக செயல்படும் சக்திகளையெல்லாம் தகர்த்திடும் நிலை உருவாகும்.

ஆதலினாலே ஆட்சி என்பது சேவை மனப்பான்மையுடன் இருந்திட வேண்டும். அதிகாரத்தினை உடைய தலைமை பொறுப்பில் உள்ளவர்களின் தேசநலனினை கருத்தில் கொள்ள வேண்டும். மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்காமல் காக்கும் விதமாக நடந்து கொள்ள வேண்டும்.

மக்களின் காவலனாக அரசு நடந்து கொண்டால் மத்திய அரசும், மாநில அரசுகளும் இந்த கலியுகத்திலும் தடையின்றி வளர்ச்சியடையும், தெய்வீக ஆட்சியாக அந்த ஆட்சி அமையும்.

உலகினில் மாற்றங்களை செய்ய வந்துதித்த மகான் அரங்கமகா தேசிக ஞானயோகியை மாறுதல்களை மக்கள் பெற வேண்டியே மன்னர்களும் மக்களும் அணுகி ஆசி பெற, நாட்டின் நிலைகள் மாறிடும், அறம் வளர வளர கலியுகமே மாற்றமடையும். மத்திய அரசும் மாநில அரசுகளும் நேசக்கரம் நீட்டி நல்லுறவாய் நட்பாய் செயல்பட்டு தேசமே முன்னேற்றம் அடையும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

—சுபம்—